**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 109/2022</u>**

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சௌமியா | வயது | 22 |
| த.பெ.(அ)க.பெ. | சேட்டு | தொழில் | நூல்மில் |
| ஊர் | இருணாப்பட்டு | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் இருணாப்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். நான் கோயம்புத்தூரில் நூல் மில்லில் வேலை செய்கிறேன். எதிரி ராகுலை தெரியும். அவர் எனது ஊர்காரர். எனது துூரத்து உறவினர். ராகுலின் தம்பி சந்துரு என்பவரும் நானும் காதலித்து வந்தோம். மேற்படி எங்களுடைய காதலுக்கு இருவீட்டிலுமே எதிர்ப்பு தெரிவித்தார்கள். சந்துருவை அவர்கள் வீட்டில் கண்டித்ததால் அவன் மனமுடைந்து தற்கொலை செய்துக்கொண்டான். மேற்படி சந்துரு இறந்ததற்கு நான்தான் காரணம் என்று கூறி எதிரி ராகுல் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து அசிங்க அசிங்கமாக பேசி சண்டை இழுத்துவந்தான். என் அம்மாவையும் பலமுறை அடித்துவிட்டான்.

(2) இந்த வருடம் மார்ச் மாதம் மாலை 4.30 மணியளவில் நான் என் வீட்டில் இருக்கும் போது ராகுல் மது அருந்திவிட்டு வந்து என்னிடம் உன்னால் தான் என் தம்பி இறந்துவிட்டான் என்று சொல்லி தேவிடியா என்றும், சொல்ல முடியாத அளவிற்கு கெட்ட கெட்ட வார்தையால் திட்டினார். அப்போது நீ என்னுடன் வா என்று கூறி நடுரோட்டிலேயே அவனுடைய துணிகளை அவிழ்த்துவிட்டு அம்மனமாக நின்றான். அவன் குடிபோதையில் இருந்ததால் ஊரில் யாரும் அவனை கேட்க பயந்தார்கள். பின்னர் எதிரி ராகுல் என்னை அடித்து என்னுடைய துணியை பிடித்து இழுத்து கிழித்துவிட்டார். மேலும் என்னுடைய மார்பு பகுதியை பிடித்து அழுத்தியும் அடித்தும் விட்டான். மேலும் கழுத்து பகுதியிலும் அடித்துவிட்டார். தோள் பட்டையின் மீது அடித்து உள்காயம் ஏற்பட்டது. அப்போது என் அப்பா வந்து அவனிடத்திலிருந்து என்னை மீட்டார்.

அப்போது என் அப்பாவையும் ராகுல் உடம்பு முழுவதும் அங்கு அங்கு அடித்து அவரை கீழே தள்ளிவிட்டான்.

(3) பின்னர் ராகுல் எத்தனை வருடங்கள் ஆனாலும் உன்னை வாழ விடமாட்டேன். உன் சாவு என்கையில் தான் என்று மிரட்டி வருகிறான். மேற்படி ராகுல் குடித்துவிட்டும் சாதாரணமாகவும் எங்கள் குடும்ப நபர்களை யாரை பார்த்தாலும் அசிங்க அசிங்கமாக திட்டியும் கொலை மிரட்டல் விடுத்தும் கொண்டும் உள்ளான். எங்களால் எங்கள் வீட்டில் வாழவே முடியவில்லை. தொடர்ந்து எதிரி எங்களுக்கு இன்று வரை தொந்தரவு கொடுத்தே வருகிறார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சமயம் போலீஸார் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன். தற்போது என் முன் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த புகார் ஆகும். புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.

## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி. 109/2022

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபரின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேட்டு | வயது | 49 |
| த . பெ . (அ)க . பெ . | கண்ணன் | தொழில் | தேங்காயம்மரம் ஏறும் தொழில் |
| ஊர் | இருணாப்பட்டு | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்துார் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்துார் | | |

முதல் விசாரணை :

(1) நான் இருணாப்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். நான் தேங்காய் மரம் ஏறும் தொழில் செய்கிறேன். அ.சா.1 எனது மகள். எதிரி ராகுலை தெரியும். அவர் எனது ஊர்காரர். அ.சா.1 என் மகளும் எதிரியின் பெரியப்பா மகன் சந்துருவும் காதலித்து வந்தார்கள். இதற்கு சந்துருவின் வீட்டில் பலத்த எதிர்ப்பு தெரிவித்தார்கள். எனவே சந்துரு அந்த அழுத்தம் காரணமாக தற்கொலை செய்துக்கொண்டார். அதன் பிறகு சந்துருவின் இறப்பிற்கு என் மகள் அ.சா.1 தான் காரணம் என கூறி எதிரி அடிக்கடி எங்கள் குடும்பத்தாரிடம் தகராறு செய்து வருகிறார். நாங்கள் வழியில் செல்லும் போது எங்களை தகாத வார்தையால் பேசுகிறார். இந்நிலையில் சுமார் 6 மாதங்களுக்க முன்பு எனக்கு தேதி நினைவில்லை, நான் வேலைக்கு சென்றிருந்த சமயம் எதிரி எங்கள் வீட்டிற்கு குடிபோதையில் வந்து எனது மகளிடம் அசிங்கமாக பேசி தகாத வார்தையால் திட்டிக்கொண்டிருந்தார். நான் மாலை 4,30 மணிக்கு வேலையை விட்டு வீட்டிற்கு வந்த போது எதிரி என் மகளிடம் கையை பிடித்து இழுத்து தகராறு செய்து கொண்டிருந்தார். எதிரி தனது ஆடைகளை கழற்றி குடிபோதையில் அம்மனமாக நின்று கத்தி கூச்சல் போட்டும் என் மகளை தேவிடியா உன்னை அறுத்துவிடுவேன் என்று அசிங்கமாக திட்டியும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் மிரட்டினான். அப்போது என் மகளை எதிரி அடித்து தோள்பட்டை, மார்பு பகுதிகளிலும் சரமாரியாக அடித்தான். ஏன்டா பையா என் மகளை அப்படி அடிக்கிறாய் என்று கேட்டேன் அதற்கு நீ ஏன்னடா என்னை கேட்பதற்கு என்று கூறி எனது இடது தோள்பட்டையில் ஓங்கி அடித்தான். நான் வலி தாங்கமால்

விழுந்துவிட்டேன். பின்னர் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து என் மகளை திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தேன். எனது இடது தோள்பட்டையில் வலி அதிகமாக இருந்ததால் தனியார் மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுத்து பார்த்து தோள்பட்டை கீழே இறங்கி இருந்ததால் மாவுக்கட்டு போட்டார்கள். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.

**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.**

**சி.சி. 109/2022**

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்தியா | வயது | 24 |
| த.பெ.(அ)க.பெ. | வெங்கடேசன் | தொழில் | கூலி |
| ஊர் | இருணாப்பட்டு | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :

(1) நான் இருணாப்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது அக்கா மகள். எதிரி ராகுலை தெரியும். அவர் எனது ஊர்காரர். அ.சா.1 என் அக்கா மகளும் எதிரியின் பெரியப்பா மகன் சந்துருவும் காதலித்து வந்தார்கள். இதற்கு சந்துருவின் வீட்டில் பலத்த எதிர்ப்பு தெரிவித்தார்கள். எனவே சந்துரு தற்கொலை செய்துக்கொண்டார். அதன் பிறகு சந்துருவின் இறப்பிற்கு என் அக்கா மகள் அ.சா.1 தான் காரணம் என கூறி எதிரி அடிக்கடி எங்கள் குடும்பத்தாரிடம் தகராறு செய்து வருகிறார். நாங்கள் வழியில் செல்லும் போது எங்களை தகாத வார்தையால் பேசுகிறார். இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் எனக்கு தேதி நினைவில்லை, மாலை சுமார் 4.00 – 4.30 மணியளவில் அ.சா.1 ன் வீட்டின் அருகே சத்தம் கேட்டு நான் அங்கு சென்று பார்த்தேன். அப்போது எதிரி அ,சா.1 – டம் மிகவும் ஆபாசமான வார்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். மது போதையில் எதிரி ஆடைகளை கழற்றி நின்றிருந்தார். சண்டை நடந்து கொண்டிருந்த சமயம் அ.சா.2 என் மாமாவும் அங்கு வந்தார். எதிரி அ.சா.1 ஐ மார்பகங்களை பிடித்து அழுத்தி மார்பு மீது அடித்தார். அதை தடுக்க வந்த அ.சா. 2 எனது மாமாவையும் எதிரி அடித்து கீழேதள்ளி அவரது இடது தோள்பட்டையில் காயம் ஏற்படுத்தினார். மேலும் எதிரி அ.சா,.1 ஐ பார்த்து மிகவும் தரக்குறைவாக உன்னை கிழிக்காமல் விடமாட்டேன் என்றும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் மிரட்டியும் அசிங்கமாக பேசினார். பின்னர் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து என் அக்கா மகளை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.